**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

EA.NO.39/2018 in EP.11/2017 in OS.244/2011 எ.ம.சா. 3. ரத்தினம்

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ம் தேதியில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய, எ.ம.சா.3 ஆன ரத்தினம் என்பவரின் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திருமதி. R. சுஜாதா., B.Sc., L.L.M., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | ரத்தினம் | தொழில் | – | |
| த/பெ க/பெ | – | மனோகரன் | ஜாதி | – | |
| கிராமம் | – | நல்லட்டிபாளையம் | வயது | – | 57 |
| தாலூக்கா | – | கிணத்துக்கடவு | தேதி | – | 27.11.2025 |

முதல் விசாரணை

நான் நல்லட்டிபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | | **வா.சா.ஆ.21** | எ ம சா 3 எனது ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த மனுவில் என்னென்ன சொத்துக்கள் குறிப்பிட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். எந்த விஸ்தீரணத்தை

ஒப்பம் /– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

பொறுத்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சுமார் 20–22 செண்ட் இருக்கும். மேற்படி சொத்தை பொறுத்து தான் இந்த மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். மனுசொத்துக்கள் ஒரு ராமத்தேவரின் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். அவரது மகன் தான் சுப்பையத் தேவர் என்றால் சரிதான். சுப்பையத் தேவரின் வாரிசு தான் இறந்து போன பாப்பு என்கிற ராமராஜ் மனுதாரர் என்றால் சரிதான்.

2) நான் 1968 ல் பிறந்தேன் என்றால் சரிதான். சுப்புலட்சுமி 1984 ல் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு விவரம், முடிவு எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சுப்புலட்சுமி போட்ட வழக்குகள் அனைத்தும் அவருக்கு எதிராக தீர்ப்பானது என்றால் சரிதான். ராமராஜ் ம னுதாக்கல் செய்திருப்பது 3 1/2 செண்டிற்கு என்றால் சரியல்ல. .சுப்புலட்சுமியின் அனுமதியின் பேரில் தான் மனுவாதிகள் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். சுப்புலட்சுமிக்கு மனு சொத்துக்கள் பாத்தியம்இல்லை என்பதால் தான் அவர் தாக்கல் செய்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொத்துக்கள் சுப்புலட்சுமி உடையது தான்.

3) சுப்புலட்சுமி என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை, சுப்புலட்சுமியம்மாள் அழைத்ததின் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றும் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம் /– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.